வகுப்பு : 12

| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

நேரம் : 3.00 மணி | **தமிழ்** | மொத்த மதிப்பெண்கள் : 90

akwaacademy.blogspot.com

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'அனகன்' என்று குறிப்பிடப்படுபவர்

அ) இராமன் ஆ) குகன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன்

2. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

3. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப் பாடியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கம்பர் ஈ) ஔவையார்

4. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

5. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

6. கருத்து 1: இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி

ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி

ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

7. அடுத்த 50 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் உயர்ந்து உலகத்தில் ------ கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

8. சென்னை மாகாணத்தை உருவாக்கியவர்

அ) பிரான்சிஸ்டே ஆ) தாமஸ்பிட் இ) சென்னப்பர் ஈ) எலியேல்

9. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

www.Padasalai.Net

Scanned with CamScanner

10. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) புதுமைப்பித்தன் – 1) நெல்லைத்தமிழ்

ஆ) தி.ஜானகிராமன் – 2) தஞ்சைத்தமிழ்

இ) தோப்பில் முகமது மீரான் – 3) கோவைத்தமிழ்

ஈ) ஜெயகாந்தன் – 4) சென்னை வட்டாரத்தமிழ்

11. ஆடலும் பாடலும் – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) முற்றும்மை ஈ) உவமைத்தொகை

12. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ------

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

13. 'குறுக்கம்' – என்பதன் பொருள்

அ) பெரிய நிலப்பரப்பு ஆ) புன்செய்யின் ஒரு பகுதி இ) ஓலைப்பெட்டி ஈ) சிறிய நிலப்பரப்பு

14. குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது பற்றி 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குறிப்பிடும் நூல் ------

அ) சிலப்பதிகாரம் ஆ) பட்டினப்பாலை இ) பதிற்றுப்பத்து ஈ) புறநானூறு

## பகுதி – II

### பிரிவு–1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3x2=6**

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது?' – விளக்கம் தருக.

16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

17. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்?' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

18. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2x2=4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு–3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** **7x2=14**

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அலை, அளை, அழை

23. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

ஆ) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

ஆ) ரொம்ப நாளாவே சொல்லிக்கிட்டு இருக்கே. இப்ப எனக்கும் சரியாத்தான் படறது.

25. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆற அமர ஆ) வழிவழியாக

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) விம்முகின்ற ஆ) நகை

www.Padasalai.Net
Scanned with CamScanner

27.ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) புதுப்பெயல் ஆ) முன்னுடை

28.பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

29.ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

அ) TICKET INSPECTOR ஆ) PLAINTIFF

30.ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

பகுதி – III

பிரிவு–1

ஏவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவம் வழி விளக்குக.

32.தலைமகன் பாங்கற்கு உரைத்த உள்ளுறை உவமச் செய்திகளை எழுதுக.

33.எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை – இடஞ்சுட்டிப்
பொருள் விளக்குக.

34.சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

பிரிவு–2

ஏவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35.ஆற்றங்கரைப்படிவு என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?

36.மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37.இலக்கியத்தில் மேலாண்மை என்னும் பாடப்பகுதி இயம்பும் 'நேர மேலாண்மை' குறித்து எழுதுக.

38.சென்னையின் போக்குவரத்து வளர்ச்சியை விளக்கி எழுதுக.

பிரிவு–3

ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமயணியைச் சான்றுடன் விளக்குக.

40.பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருந்தி எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது)

ஆ) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

41. கீழ்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

அ) முன் < ஆ) முதல் <

42.இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

அந்தியருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியநிதக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

– பாரதிதாசன்

www.Padasalai.Net

Scanned with CamScanner

43. தமிழாக்கம் தருக.

1) In India, the growth of libraries has lagged.
2) Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy
3) The Great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers.
4) In the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits.

akwaacademy.blogspot.com

குறிப்பு: காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து; மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்தே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

வினாக்கள்:

1) உடல்நலப் பாதிப்புகளுக்குக் காரணமானவை யாவை?
2) நாம் எந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?
3) எவ்வாறு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்?
4) சமச்சீர் உணவு என்பது யாது?

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. (அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. (அல்லது)

ஆ) நாட்டிய அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடித்த மாதவி, 'சிறந்த தலைக்கோலியே'! – இளங்கோவடிகள் வழி விளக்குக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) "விண்வேறு......" எனத் தொடங்கும் இதில் வெற்றி பெற பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....... உடைத்து' – என முடியும் 'வினைத்திட்பம்' அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாவை எழுதுக.

www.Padasalai.Net

Scanned with CamScanner